
# பகிர் 2015

12வது ஆண்டு சிறப்பு மலர்




நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா

**OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA**

- www.delftoldstudents.ca -



## When a critical illness strikes, the last thing you want to worry about is money

Sun Life Financial is here to help. With Sun Life Financial's critical illness insurance, you can concentrate on improving your quality of life if a serious illness takes you by surprise.

We're helping Canadians focus on recovery, with over $155 million in claims paid.

Here are some details on how we helped Canadians in 2011:

- Our average claim amount paid: $76,259
- The average age of a benefit recipient: 49
- Claims paid within five years of policy being purchased: 36%

*Questions?*


I'm here to help you achieve your goals for the future, with reliable health insurance solutions. Sun Life Financial has been a pioneer in providing critical illness insurance to Canadians for years and we continue to offer innovative solutions to help you achieve lifetime financial security. **Talk to me today about creating a plan for your future.**




**Ajith Sabaratnam**
Bus 416-439-2800
Cell 647-401-5800
ajith.sabaratnam@sunlife.com
www.sunlife.ca/ajith.sabaratnam

Sun Life Financial
Life's brighter under the sun

*Mutual funds offered by Sun Life Financial Investment Services (Canada) Inc.
© Sun Life Assurance Company of Canada, 2013.


REAL ESTATE & MORTGAGE SERVICE
SOLD
Your Dreams,
My Mission....
THINKING OF
BUYING OR SELLING
A HOME?
MORTGAGE ALLIANCE
Lic. #: M10000341
BUS: 416-499-5454
FAX: 416-499-8366
200 - 2005 Sheppard Ave E,
Toronto, ON M2J 5B4
Century 21
Leading Edge Realty Inc.
Brokerage
BUS: 416-298-6000
FAX: 416-298-6910
301 - 1825 Markham Rd.,
Toronto, ON M1B 4Z9
REALTOR
MULTIPLE LISTING SERVICE
SRI NADARAJASUNDRAM
647-831-3279
srinada21@gmail.com
www.srishome.com



காயம் அடைந்து விட்டீர்களா?
We specialize in serious personal injury and insurance claims.
டரன் கிருபா
கனேடிய தமிழ் வழக்கறிஞர்
Darren Kirupa, J.D.
Barrister and Solicitor
FIREMAN STEINMETZ
Personal Injury Lawyers
www.firemanlawyers.com
416.904.9118

# சமர்ப்பணம்



நெடுந்தீவு மகாவித்தியாலயத்தின் முதலாவது அதிபரும்,
நெடுந்தீவின் கல்வித் தந்தையுமான
அமரர். உயர்திரு. CV. எட்வேட் நவரத்தினசிங்கம் அவர்கள்

# சமர்ப்பணம்



**நெடுந்தீவுக் கிராமசபையின் உத்தியோகத்தராக 32 ஆண்டுகள் சேவையாற்றியவரும், சிறந்த சமூக சேவையாளருமான அமரர். உயர்திரு. சொக்கலிங்கம் இராமநாதன் அவர்கள்**

## பகிர் வாயிலில்....

பூமியில் உயிர்கள் உதயமாவதற்கு முன்னர் அது வெறும் கற்கோளமாகவே இருந்திருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாக நிரூபித்திருக்கின்றார்கள். கற்களில் இருந்து தான் மண் உருவாகியது. கற்களில் இருந்து தான் மனிதன் நெருப்பைக் கண்டறிந்தான். இவ்வாறு உயிரியல் மாறுதல்களுக்கு கற்கள் உந்துசக்தியாக இருந்திருப்பினும் இவற்றைக் கொண்டு வேலிகள் அமைக்கும் சிறப்பு எம் தீவுக்கே உரியதாகும். அந்த அற்புதமான வேலிக்கு அழகு தமிழில் நாம் அழைக்கும் பெயர் **பகிர்**.

**பகிர்**

இலங்கைத் தீவின் நெற்றிக்கண் என நிமிர்ந்து நிற்கும் நெடுந்தீவு உலகில் தனித்துவம் வாய்ந்த தீவாகத் திகழக் காரணம் **பகிர்** என்று சொல்லப்படும் கல்வேலி மட்டுமல்ல, அப்பதத்திற்குரிய அத்தனை குணாதிசயங்களையும் கொண்டிருப்பது தான். **பகிர்** என்பது பகிர்தல் என்று பொருள் படும். எதை எதை எல்லாம் பகிர்ந்து கொள்ள முடியுமோ அதை எல்லாம் அழகாகப் பகிர்ந்து கொள்ளும் எம் மண்ணின் மகத்துவத்தைப் பலவாறு அடுக்கிக் கொண்டே போகலாம்.

அன்பு காட்டுவதில் அனைவரையும் நெகிழ வைக்கும் அன்புப் பகிர்வாய், விருந்தோம்பலில் எமக்கு நிகர் எவருமில்லை என்று சொல்லுமளவிற்கு உணவளிக்கும் உணவுப் பகிர்வாய், உள்ளதை இல்லாதவருடன் பகிர்ந்து கொள்ளும் உதவிப் பகிர்வாய், மற்றவர் துயரைத் தம்துயர் போல் மதிக்கும் துன்பப் பகிர்வாய், தான் அறிந்தவற்றை மற்றவர்களுக்கு அறிவுக்கும் அறிவுப் பகிர்வாய் சொந்த பந்தங்களை எடுத்துக்காட்டு வதற்காக ஏற்படுத்தப்பட்ட காணிப்பங்கு என்னும் நிலப்பகிர்வாய் இப் **பகிர்** என்னும் பதம் எம் தீவு மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

இலகுவில் யாராலும் அசைத்து விட முடியாத பகிர் வேலிகளை தமிழனின் தனித்து வமான உறுதியையும் வீரத்தையும் அல்லவா வெளிப்படுத்துகின்றன. இலங்கைத் தீவின் தனி நெடிய தீவாம் எமது நெடுந்தீவின் அத்தனை சிறப்புக்களையும் சொல்லும் அற்புதமான சொற்பதத்தை ஒரு நூலின் தலைப்பாக்கி உள்ளோம். அதன் நுழைவாயினூடு உள் நுழைகின்றீர்கள். இந்தப் **பகிர்** நூலின் ஒவ்வொரு கற்களும் உங்களுடையது. வார்த்தைகளால் வரையறுக்க முடியாத எமது மண்ணின் மகத்துவத்தை முடிந்தவரை பகிர் மூலம் உங்களோடு பகிர்ந்து கொள்ள முயற்சிக்கின்றோம்.

***இனி உள் நுழையுங்கள்.....***
***இது உங்கள் நேரம்.....***




**நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா**

நிர்வாக அமைப்பு 2015 – 2016

**இருப்பவர்கள்:**

இடமிருந்து வலம்: திருமதி. கலாதேவி விசாகன் (நிதியாளர்), திரு. க. பொன்னுத்துரை (செயலாளர்) திரு. சு. நடராசா (தலைவர்) திரு. இரா கந்தையா (உப-தலைவர்)

**நிற்பவர்கள்:**

இடமிருந்து வலம்: திரு. வே. துரைசிங்கம் (உப-செயலாளர்), திரு. கு. வரதராசன், திரு. ச. தயாபாரன், திரு. சு. குமாரசாமி



நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா / நெடுந்தீவுக்கிளை

நிர்வாக அமைப்பு 2015 – 2016

# நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
## நடப்பாண்டு நிர்வாக அமைப்பு 2015 - 2016

**ஆலோசகர்:**

திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு, அதிபர்

**நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்:**

**தலைவர்:**

திரு. நடராசா சுப்பிரமணியம் - 905 457 7678 / 416 802 6291

**செயலாளர்:**

திரு. பொன்னுத்துரை கணபதிப்பிள்ளை - 647 774 6154

**பொருளாளர்:**

திருமதி. கலாதேவி விசாகன் - 905 456 9891

**துணைத் தலைவர்:**

திரு. கந்தையா இராமநாதன் - 416 428 4760

**துணைச்செயலாளர்:**

திரு. துரைசிங்கம் வேலுப்பிள்ளை - 416 540 5225

**செயற்குழு உறுப்பினர்கள்:**

திரு. குமாரசாமி சுப்பிரமணியம் - 416 587 3107
திரு. தயாபராசா சங்கரப்பிள்ளை - 416 284 3884
திரு. வரதராசன் குமாரசாமி - 416 587 3107
திரு. யோகரத்தினம் கனகரத்தினம் - 416 892 3011

# நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
# நெடுந்தீவுக்கிளை நிர்வாக அமைப்பு 2015 - 2016

**ஆலோசகர்கள்:**
புலவர் A.W. அரியநாயகம் (ப.நோ.கூ.சங்கத்தலைவர்) - 0774306729
திரு. அரசரத்தினம் கனகராசா (இளைப்பாறிய கோட்டைக்கல்வி அதிகாரி) - 0776454008

**ஒருங்கிணைப்பாளர்:**
திரு. S.P. அருளப்பு (தவிசாளர் நெடுந்தீவு பிரதேசசபை) - 0779050272

**தலைவர்:**
திரு. அருந்தவசீலன் எட்வேட்
(தலைவர் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், நெடுந்தீவு) - 0776624121

**துணைத்தலைவர்:**
திரு. சச்சிதானந்தன் (அதிபர்) - 0779561543

**இணைச்செயலாளர்கள்:**
திரு. பி. ஜேன்சன் கென்னடி (பிரதேச செயலாளர் அலுவலகம்) - 0778665380
திருமதி. மேரி மெற்றலின் (ஆசிரியை) - 0774121331

**பொருளாளர்:**
திரு. அ. புவனேந்திரன் (பிரதேச சபை) - 0778946582

**துணைப்பொருளாளர்:**
செல்வி. மேகலா பாலசுப்பிரமணியம் (பிரதேசசபை) - 0775826353

**செயற்குழு உறுப்பினர்கள்:**

அருட்சகோதரி. செல்வி. மேரி யூட் லூமினா ஜோர்ச்(றோ.க.பெ.கல்லூரி அதிபர்) - 0775563261
திருமதி. கலா தெட்சணாமூர்த்தி (அதிபர், சிறீகந்தா வித்தியாலயம்) - 0776757526
திருமதி. லோகேஸ்வரி நகுலசிறீ (அதிபர், மங்கையற்கரசி வித்தியாலயம்) - 0774825492
திருமதி. செல்வராணி பாக்கியநாதன் (அதிபர், சீக்கிரியாம்பள்ளம் அ.தமிழ்.க.வித்தியாலயம்)
திருமதி. வனிதாராணி தேவராசா (அதிபர், சுப்பிரமணியம் வித்தியாலயம்)
திருமதி. சாரதா கிருஸ்ணதாஸ் (அதிபர், மகாவித்தியாலயம்)
செல்வி. அகிலாண்டேஸ்வரி சின்னத்தம்பி (அதிபர், மாவிலித்துறை வித்தியாலயம்)
திரு. சோ. தம்பிராசா (பிரதேசசபை செயலாளர்) - 0775994901
திரு. வே. நவரத்தினசிங்கம் (4ம் வட்டாரம்) - 0779561543
திரு. இரா. அருட்பிரகாசம் (6ம் வட்டாரம்) - 0775239324
திரு. சி. எட்வேட்ராசா (11ம் வட்டாரம்) - 0775713406
திரு. தோமஸ் அல்வின் - 0776624121
திரு. அ. அருள்நேசன் (11ம் வட்டாரம்) - 0772720111
திரு. ம. அந்தோனிப்பிள்ளை (13ம் வட்டாரம்) - 0771166051
திரு. T. பிரசாந்தன் (12ம் வட்டாரம்) - 0778030044

## ஆசிச்செய்தி

'பகிர்' தனது சேவைப்பயணத்தில் இன்னும் ஒரு புதிய தசாப்த்தத்திற்குள் கால் பதித்து முன்னோக்கிப் பயணிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் கனடாவிலும் நெடுந்தீவிலுமாக ஒன்றினைந்து எமது தீவின் கல்வி, சமயம், கலாச்சாரம் போன்ற சமூகப் செயற்பாடுகளின் முன்னேற்றத்தில் ஈடுபட்டு வருவது வரவேற்கத்தக்கது.

ஒரு தசாப்த்தத்தை தாண்டியுள்ள நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் செயற்பாடுகளை 'பகிர்' என்னும் இந்த மலர் தாங்கி நிற்பது ஒரு சிறப்பு. 'பகிர்' நெடுந்தீவு மண்ணை சொந்தமாக கொண்ட அனைவருக்கும் ஒரு உறவுப்பாலமாக அனைவரின் கைகளிலும் திகழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். எம் மாணவர்களின், இன்னும் பல ஆக்கங்கள் பகிரை மேருகூட்டுவது வரவேற்க்க தக்கது. அத்தோடு மாணவர்களின் கல்விசார் சாதனைகளையும் பகிர் தாங்கி வரவேண்டும்.

தொடர்ந்தும் உங்கள் அனைவரின் பணி எம் தீவுக்கு கிடைக்க நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளையும் இறைவன் ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஆசித்து வாழ்த்துகின்றேன்.

*அருட்பணி செ. நேசநாயகம்,*
*பங்குத் தந்தை,*
*நெடுந்தீவு.*

# ASSEMBLY OF GOD CHURCH
# THUNGALAI – DELFT

Pastor. T. Mathivathan
A.O.G Church
Ward. No:05
Thungalai – Delft.

Date 20../01../2015......

**வாழ்த்துரை**

"ஆண்டவராகிய இயேசு கிறிஸ்த்துவின் நாமத்தில் நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்."

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் 12வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் "பகிர்" என்ற நூல் ஆக்கத்திற்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். இவ் அமைப்பு நெடுந்தீவு பிரதேச மக்களுக்கும், மாணவர்களுக்கும் தன்னாலான அளப்பெரிய சேவைகளை வழங்கிவருகிறது. அப்பிரதேச அபிவிருத்தியில் இவ் அமைப்பின் முக்கியத்துவம் வெகுவாக உணரப்பட்டுள்ளது. கல்விக்கு மாத்திரமின்றி வாழ்வாதார உதவிகள் பலவற்றையும் வழங்கி பல குடும்பங்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது. முதியோரை "முதுசொம்" என நினைத்து பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கு அமைவாக நோய் நொடியால் அவதிப்படுவபர்களுக்கு பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை முன்னெடுத்துள்ளதை கண்ணூடாக பார்க்க முடிகிறது. இவ் அமைப்பின் வேலைத்திட்டங்கள் பல்வேறுபட்ட வளர்ச்சிப் படிகளைக் காணவேண்டும். இவ்வாறான வெளியீடுகள் தொடர்ச்சியாக இடம்பெறவேண்டும் என இறைவனைப்பிரார்த்திப்பதோடு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறி நிற்கின்றேன்.

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை அசீர்வதிப்பார்.
நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் கண்டாய் (சங்கீதம் 128.5)

என்றும் கிறிஸ்துவின் பணியில்
T. mathi../
Pastor.T.Mathivathan
Assembly of God
Thungalai-Delft
20/01/15
Pastor. T. Mathivathan

# வலயக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

**கனடா வாழ் நெடுந்தீவு மக்களின் நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா வருடந்தோறும் வெளிவரும் "பகிர்" என்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.**

வடக்கு எதிர்கொண்ட 30 வருடகால உள்நாட்டு யுத்தம் காரணமாக புலம்பெயர்வுகளை சந்தித்தவர்கள் அனேகர். புலம்பெயர்வுகள் காரணமாக நீங்கள் எம்மிலிருந்து வெகுதூரத்தில் வசித்தாலும் வடபுலத்து சிறார்களின் கல்வி மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புள்ள சேவையை நீங்கள் ஆற்றி வருகின்றீர்கள். நாம் யுத்தகாலத்தில் இழந்த அனைத்து வழங்களையும் மீட்டெடுத்து நம்சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்.

இணைப்பாடவிதான செயற்பாடுகளையும் அதற்கு அப்பாற் பட்ட செயற்பாடுகளையும் கற்பிப்பதற்கு இத்தீவில் அவர்களுக்கு பக்கபலமாக இருப்பீர்களாக. அவர்களின் வளர்ச்சியை வளமாக்கி சமூகத்தில் இடம்பெறவும், சர்வதேச அரங்கில் அவர்கள் ஈடுகொடுக்கக்கூடிய அளவில் உங்கள் எண்ணங்களையும் நேரங்களையும் அவர்கள் மட்டில் சிறிது நிறுத்துவீர்களாக.

இந்நூலின் சிறப்புகள் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து இந்நூல் வெளிவர எனது நல்லாசிகளையும் தெரிவித்து நிற்கின்றேன்.



தி.ஜோன் குயின்ரஸ்

வலயக்கல்விப்பணிப்பாளர்.

தீவகம்.

T.John Quintus
Zonal Director of Education
Islands Zone, Velanai.



## தலைவரிடமிருந்து....

அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய நெடுந்தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும், கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும், அவர்களின் வழித்தோன்றல்களுக்கும், மற்றும் உலகெங்கும் பரந்து வாழும் எம் ஊர் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் வணக்கம்.

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் 12 ஆண்டுகள் நிறைவு விழாவும், "பகிர்" மலர் வெளியீடும் இந்த வருடமும் நெடுந்தீவில் நடைபெற உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். விழா சிறப்பாக நடைபெற ஆதரவு வழங்கி வரும் அனைத்து நெடுந்தீவு மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நெடுந்தீவு கிராமத்தை ஓர் கல்வி கிராமமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் கடந்த 12 ஆண்டுகளாக அனைத்துப் பாடசாலைகளுக்கும், மாணவர்களுக்கும், மக்களுக்கும் பல வழிகளிலும் உதவி அளித்து வருவதுடன் மாணவர்களின் அடிப்படைத் தேவைகளையும், குடும்ப வருமானத்தை யும், கல்வி கற்றலில் உள்ள ஆர்வத்தையும் கருத்தில் கொண்டு மாணவர்களை தேர்ந்து எடுத்து ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடியும் வரையும் உதவி வழங்குவதுடன், தரம் 5இல் கல்வி கற்கும் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி வருவதோடு. மேலும் கணனி (Computer) வகுப்புகள் தரம் 6 இலிருந்து பாடசாலைக்கு வெளியே மேற்கிலும், மத்தியிலும் ஆரம்பிப்பதற்கு பெற்றோர்களினதும், மாணவர்களினதும் ஒத்துழைப்பு எதிர்பார்த்துள்ளோம். உயர்தரப் பாடசால்லைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர்கள் பற்றாக்குறை உண்டென்பதை அறிகின்றோம். இதற்கான உதவியைச் செய்வதற்கு முயற்சி செய்து கொண்டு இருக்கின்றோம் என்பதையும் இங்கு குறிப்பிடவிரும்புகின்றேன்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு விளையாட்டு முக்கியம் என்பதை உணர்ந்து நெடுந்தீவு கிழக்கு, சுப்பிரமணியம் வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானத்திற்கு பணம் வழங்கியதுடன், ஸ்ரீகாந்தா வித்தியாலயத்திற்கு விளையாட்டு முற்றம் அமைத்துக் கொடுத்ததுடன், அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து கால்பந்து (Football) கூடைப்பந்து (Basket ball) கரப்பந்தாட்டம் (Volley ball) போன்ற விளையாட்டுக்களை ஊக்குவிக்க உள்ளோம்.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள முதியோருக்கு மாதாந்தம் 500 ரூபா வழங்கி வருவதானல் 50இற்கு மேற்பட்ட முதியோர்கள் பயன் பெற்று வருகின்றார்கள். வறுமைக்கோட்டின் கீழ் உள்ள முதியோருக்கும் வருடா வருடம் மருத்துவ உதவி செய்தல் அதாவது கண், காது போன்றவற்றைச் சோதனை செய்து அவற்றைச் சீர்படுத்துதல் போன்றவற்றை இவ்வருடம் முதல் ஆரம்பிக்க உள்ளோம்.


வருடா வருடம் பயன் தரும் மரங்களை (தென்னை, பனை, நிழல் தரும் மரங்கள்) நாட்டுதலால் சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படுவதுடன், மக்களும் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புள்ளது. நெடுந்தீவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைக் குறிப்பிட்டு எமது மன்றத்தின் ஆதரவில் பெயர்பலகைகள் மூலம் விளம்பரம் செய்ய உத்தேசித்துள்ளோம்.

மன்றத்தின் நெடுந்தீவுக்கிளைத் தலைவர் திரு. அருந்தவசீலன் எட்வேட், உபதலைவர் A. சச்சிதானந்தம், இணைச் செயலாளர் திரு. ஜோன்சன் கென்னடி, திருமதி. மேரி மெற்றலின், நிதியாளர் திரு. புவனேந்திரன் அந்தோனிமுத்து, போசகர் புலவர் திரு. A.W. அரியநாயகம், ஒருங்கிணைப்பாளர் திரு. S.P. அருளப்பு, செல்வி. மேகலா பாலசுப்பிரமணியம் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும்

"பகிர்" மலருக்கு விளம்பரங்கள் தந்து உதவும் அனைத்து வர்த்தகப் பெருமக்களுக்கும், அனைத்து வழிகளிலும் தொடர்ந்து ஆதரவு வழங்கி வருடம் கனடா வாழ் ஊர் உறவுகள் அவர்களது வழித்தோன்றல்களுக்கும், உலகெங்கும் வாழும் எம் ஊர் உறவுகளுக்கும், நண்பர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கு சென்ற பொழுது மன்றத்திற்குப் பணம், மற்றும் எமக்குத் தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்த அனைத்து உள்ளங்களுக்கும், கனடாவிலிருந்து பலவழிகளிலும் உதவி வரும் திரு. சந்தியாப்பிள்ளை சின்னப்பு ஆசிரியருக்கும், என்னுடன் இணைந்து செயற்படுகின்ற செயலாளர், நிதியாளர், உப-தலைவர், உப-செயலாளர், அனைத்து நிர்வாக உறுப்பினர்கள், அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும், எனது பணிக்கு பக்கபலமாக இருக்கும் என் மனைவி அஞ்சலா, பிள்ளைகளுக்கும் என் நன்றியைத் தெரி
வித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி!

*நெடுந்தீவு நடராசா. சுப்பிரமணியம்*
*தலைவர்*
*நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் - கனடா*
*தொலைபேசி இலக்கம்: 905 457 7678, 416 802 6291*
*E.mail:pahirdelft@gmail.com*
*nada_1948@hotmail.com*
*www.delftoldstudents,ca*



## கௌரவ செயலாளரிடமிருந்து....

மதிப்பிற்குரிய கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும், அவர்களின் உறவுகள், வழித் தோன்றல்கள், நலன்விரும்பிகள், நெடுந்தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கும், மாணவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த வணக்கம்! பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் தொடங்கி 12 ஆண்டுகள் நிறை வடைகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித் துக் கொள்கின்றேன். எமது மன்றம் இதுவரை 30க்கு மேற்பட்ட செயற்பாடு, செயல் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

**தற்போது நடைமுறையில் உள்ள செயல்திட்டங்கள்:**

1. நெடுந்தீவில் உள்ள வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறாத, ஆதரவற்ற வறிய முதியவர்களுக்கு மாதாந்த அடிப்படையில் கடந்த பல வருடங்களாக பணம் வழங்கி வருகின்றோம்.
2. நெடுந்தீவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள வறிய கல்வியில் ஆர்வமுள்ள மாணவர் களுக்கு கடந்த 12 வருடங்களாக பண உதவி வழங்கிவருகின்றோம். வருடா வருடம் புதிய மாணவர்களையும் சேர்த்துச் சிறுவர்கள் எல்லோருக்கும் பல்கலைக் கழகப் பட்டப் படிப்பு முடியும் வரை பண உதவி வழங்குகின்றோம்.
3. வெளி மாவட்டங்களில் நடைபெறும் கலை, கலாச்சார விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்றும் வறிய மாணவர்களுக்குப் பண உதவி அளிக்கின்றோம்.
4. நெடுந்தீவில் நடைபெறும் இல்லப் பொது விளையாட்டுப் போட்டிக்கு வருடா வருடம் சிறிய பணத் தொகையை உதவுகின்றோம்.
5. பாடசாலைகளில் சில முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறையுள்ளது. அதற்கு மேலதிக ஆசிரியர்களை நியமித்து மாதாந்த அடிப்படையில் பணம் வழங்கி வருகின்றோம்.
6. பாரிய நோய்களினால் பாதிக்கப்படும் எம்மவர்களுக்கு உதவும் முகமாக "மருத்துவநிதி" ஒன்றை ஆரம்பித்து உதவி புரிந்து வருகின்றோம்.
7. இரண்டு பாடசாலைகளுக்கு ஆரம்ப வகுப்புகளுக்கு கணனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பித் துள்ளோம். அடுத்த வருடம் தொடக்கம் நெடுந்தீவில் உள்ள 8 பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.
8. வருடா வருடம் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கு 5,000 ரூபாயை வழங்குகின்றோம்.
9. கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்கள் கற்பிப்பதற்கு பாடசாலைகளின் ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ளது. இதற்கு ஆசிரியர்களை நியமித்து மாதாந்த அடிப்படையில் ஊதியம் வழங்கி உள்ளோம்.

தொடர்ச்சி....

10. நெடுந்தீவு மத்தியபகுதி, மேற்குப்பகுதி ஆகியவற்றில் கணனி வகுப்புகள் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்துள்ளோம்.
11. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புகள் நடாத்துவதற்கு ஆரம்பித்துள்ளோம்.
12. மன்றத்தின் 10வது ஆண்டு விழாவும் "பகிர்" மலர் வெளியீடும் நெடுந்தீவு மத்தியில் உள்ள பிரதேச சபைக் கலாச்சார மண்டபத்தில் 2013 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரிக்கு புகைப்படக் கருவி (Camera) அன்பளிப்புச் செய்ததுடன் அரங்கில் முதியோருக்கான உதவிப் பணம், வறிய மாணவர்களுக்கான பாடசாலை பண உதவி, தரம் 5இன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு வங்கிப் பண வைப்புப் புத்தகமும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு பண உதவியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் செல்வி. மரியதுஷ்யந்திக்கு ஒலிப்பதிவுக் கருவியும் வழங்கப்பட்டன.
13. நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாலயத்திற்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு பண உதவியுள்ளோம்.
14. நெடுந்தீவில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பாடசாலைப்பைகள் (School Bags) அன்பளிப்புச் செய்துள்ளோம்.
15. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு பணம் கொடுத்துள்ளோம்.
16. கடந்த வருடம் (2014இல்) இலங்கை வங்கியில் 5 இலட்சம் ரூபா (5,00000/=) நிலையான வைப்புக் கணக்கில் வைப்பில் இட்டுள்ளோம். வருடா வருடம் வரும் வட்டிப்பணத்தை செயல்திட்டங்களுக்குச் செலவிட உள்ளோம்.

எமது மன்றத்திற்கு பலவழிகளிலும் ஆதரவு தருகின்ற கனடா வாழ் நெடுந்தீவு மக்களுக்கும், அவர்களின் வழித்தோன்றல்களுக்கும், நண்பர்கள், நலன் விரும்பிகள், "பகிர்" மலருக்கு விளம்பரங்கள் தந்துதவும் வர்த்தகப் பெருமக்களுக்கும், ஆக்கங்கள், வாழ்த்துரைகள் வழங்கியோருக்கும், மற்றும் நெடுந்தீவில் நடைபெறும் விழாவிற்கும் "பகிர்" மலர் வெளியீட்டிலும் பங்குபற்றுவோருக்கும், கலை நிகழ்ச்சிகளைத் தந்துதவுவோருக்கும், நெடுந்தீவின் கிளைத்தலைவர் திரு. எட்வேட் அருந்தவசீலன், உபதலைவர் A. சச்சிதானந்தம், இணைச் செயலாளர்கள் திரு. ஜோன்சன் கென்னடி, திருமதி. மேரி மெற்றலின், பொருளாளர் திரு. அ. புவனேந்திரன் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர் திரு. S.P. அருளப்பு அவர்களுக்கும், மன்றப் போஷகர் புலவர் A.W அரிய நாயகம் அவர்களுக்கும், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், நெடுந்தீவில் வாழும் மக்களுக்கும் எமது மன்றத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சிறகு பெற்றும் கூடு மறவோம்"

**நெடுந்தீவு கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**
**கௌரவ செயலாளர்**
**நெ.பா.ப. மாணவர் மன்றம் கனடா**
**Tel: 647 774 6154**



## நிதியாளரிடமிருந்து....

எம் மண்ணின் மைந்தர்களுக்காக எமது சங்கத்தின் நிதியாளராக இருப்பதில் என் சக அங்கத்தவர்களுடன் சேர்ந்து முதற்கண் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன். இந்தச் சிறுசிறு பங்களிப்பையேனும் மனமகிழ்ச்சியோடு அள்ளித் தந்து எமது சேவை யின் கரங்களாக இருப்பவர்களுக்கும், அவர்களின் பங்கு அளிக்கின்ற தார்ப்பரியத்தை தெரியப்படுத்துவதற்கும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதோடு அவர்களுக்கு எமது உளப்பூர்வமான நன்றியைத் தெரி யப்படுத்திக் கொள்கிறேன்.

எனது சகோதரியின் மகளின் திருமணம் இலங்கையில் நடப்பதென முடிவானது. எனது மனதிற்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது. திருமணத்தோடு என் மண்ணையும் மனங்களையும் தரிசிக்க ஒரு சந்தர்ப்பம் இது என்று மனம் மகிழ்ந்தேன். என் தாய் மண் நெடுந்தீவுக்குச் சென்றவுடன் நெடுந்தீவுக் கிளைத் தலைவர் திரு. எட்வேட் அருந்தவசீலன், செயற்குழு உறுப்பினர்கள், எங்கள் மன்றத்திற்கு உதவி வழங்குவரான எனது மைத்துனி இலண்டனில் இருந்து வருகை தந்த திருமதி. மனோ ரஞ்சினி ஜெகநாதன், இவர்களுடன் சென்று எங்கள் மன்றத்தில் உதவி பெறும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் வயோதிபர்களையும், ஆதரவற்றவர்களையும் மிகவும் பிரயத்தனம் எடுத்து அவர்களின் இல்லங்களுக்குச் சென்று அவர்களை நேரில் சந்தித்தோம். உண்மையில் இலங்கையில் பொருட்களின் விலை உயர்வாலும், வாழ்க்கைச் செலவாலும் நாம் கொடுக்கும் உதவி மிகவும் சிறியதே. எனினும் இராமனுக்கு பாலம் அமைக்க உதவிய அணில்கள் போல் எமது உதவியும் இருக்கட்டுமே. அது சிறிய உதவி எனினும் அவர்களின் நிலையில் அதுவும் அவர்களுக்கு பேருதவியாக இருக்கிறது. நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் கனடா தலைவர் திரு. சுப்பிரமணியம் நடராஜா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கடைசி இரண்டு மாத பணத்தை என் கையால் கொடுக்கும் பாக்கியம் கிடைத்தது. அதை அவர்களுக்குக் கொடுக்கும் பொழுது, கண்கலங்கி கை நடுங்க, கை எடுத்துக் கும்பிட்டு வாங்கிய காட்சியைப் பார்த்து என் மனம் பதறிப்போய் நின்ற காட்சியை என்னால் மறக்க முடிய வில்லை. நாம் செய்யும் உதவி எல்லாம் வீணாவதில்லை. பல மடங்காகி நம் சந்ததியினருக்கும், நாம் இறந்தபின் புண்ணியமாகவும் உதவுகிறது.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

ஏழைகளின் கடும் பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் தன் பொருளைச் சேமித்து வைக்கும் இடம் ஆகும் என்று திருக்குறளில் திருவள்ளுவர் கூறுகின்றார். தொடர்ந்து எமது அங்கத்தவர்களின் முழு உழைப்பால் எமது சங்கத்தின் வளர்ச்சி எமது மக்களுக்கு உதவி யாக இருப்பதை நேரில் பார்த்த போது உள்ளம் உவகை அடைந்தது.

அடுத்தநாள் சக அங்கத்தவர்களுடன் நெடுந்தீவில் உள்ள எட்டு (8) பாடசாலைகளுக்கு விஜயம் செய்தோம். நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம், கனடா அங்கத்தவர்களின் கோரிக்கையின்படி 5ம் வகுப்புக்குள் உள்ள நான்கு (4) பாடசாலைகளுக்கு சுப்பிரமணியம் வித்தியாலயம், மாவிலித்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், சிறீஸ்கந்த வித்தியாலயம், இப்பாடசாலைகளுக்கு புத்தகப்பைகள், படிப்பிற்கான உபகரணங்கள், இனிப்பு வகைகளும் வழங்கப்பட்டன. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாண மாணவிகளுக்கு மாதாந்த அடிப்படையில் கொடுக்கப்படும் பணம் எட்டு (8) பாடசாலைகளுக்கும் வழங்கினோம். இது அவர்களுக்கு பெரும் ஊக்குவிப்பாக இருக்கும் என்பதே எமது நோக்கம். ஒரு ஊரின் வளர்ச்சி ஒரு சமுதாயத்தின் உயர்ச்சி.

அவ்வூரின் இளைஞர்கள், சிறார்களின் கல்வியிலேயே உள்ளது. எனவே குறுகிச் சிறுகிப் போன சனத்தொகையால் குறைந்த மாணவர் தொகையாலும் அவர்களைப் பார்த்த போது கட்டாயம் ஒரு ஊக்குவிப்புத் தேவை என்பதை உணர்ந்தேன். மாணவர்களை ஊக்குவிப்பதற்காக நம்மால் ஆன ஒரு பங்களிப்பை உங்கள் சார்பில் செய்தேன். நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் நெடுந்தீவுக்கிளைத் தலைவர், உறுப்பினர்கள் எல்லாப் பாடசாலைகளின் அதிபர்கள் எல்லோரும் நெடுந்தீவு செஞ்சிலுவை சங்கக் காரியாலயத்தில் கூட்டம் வைத்துப் பிள்ளைகளின் கல்வியின் தராதரத்தை எப்படி உயர்த்துவது, ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் பரீட்சைக்கான விசேட வகுப்புக்கள், 12 ஆண்டுகளில் 30க்கு மேற்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றியது.

நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் கனடா தலைவர், செயலாளர், பொருளாளர், ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று பணம் திரட்டி முதியவர்கள் மாணவர்களின் எதிர்காலத்தை திட்டமிட்டு இலங்கை வங்கியில் 2014 ஆண்டு 5இலட்சம் ரூபாவை வைப்பிலிட்டு இருப்பது பற்றி, நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம், கனடா இவர்களின் அர்ப்பணிப்புகள் பற்றியும் நெஞ்சார வாழ்த்தி நின்றார்கள். இவை எல்லாவற்றையும் நேரில் பார்த்த போது எமது நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்ற அங்கத்தவர்களின் இத்தனை கால அர்ப்பணிப்பின் வெளிப்பாடு இது என உள்ளம் ஆனந்தம் அடைந்தது. ஒருவருக்கு வசதி வாய்ப்பினை இறைவன் ஒருமுறை தான் கொடுக்கிறான். அந்த வாய்ப்பை தனக்கும் தன் குடும்பத்திற்கும் மட்டும் செயற்படாமல் தாம் பிறந்த மண்ணையும் மனங்களையும் மறக்காமல் அவர்களின் மேம்பாட்டிற்காக வாழும் உள்ளங்களை வாழ்த்தி நின்றதை பார்த்த போது இவையனைத்தும் அம்பாக சென்று நான் பார்த்ததே தவிர, இவற்றிற்கான மூலகாரணமாக எய்தவர்களாக இருப்பவர்கள் பொருளை தந்து ஆதரவைத் தந்தவர்கள் நீங்களே என என் விரல்கள் உங்களைக் காட்டி என் இரு கரம் கூப்பி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

*அன்புடன்*

*திருமதி. கலாதேவி விசாகன் (மாலதி)*
*நிதியாளர்*
*நெ.பா.ப..மாணவர் மன்றம் - கனடா*
*தொலைபேசி: 905 456 9891*



## வாழ்த்துச் செய்தி

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா அமைப்பினால் இவ்வாண்டு வெளியிடப்படும் "பகிர் - 2015" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பழைய மாணவர் மன்றம் - கனடா ஸ்தாபிக்கப்பட்டு 12 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள இந்த நல்ல தருணத்தில் அவர்களின் சமூகப்பணியையும், கல்வி மேம்பாட்டுக்கு எமது தீவகத்தில் ஆற்றி வரும் சேவைகளையும் நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்து அவர்களை பாராட்டி நிற்பது நெடுந்தீவின் ஒவ்வொரு பிரசையின் கடமையாகும் என நான் எண்ணுகின்றேன். அந்த வகையில் தீவக மக்கள் சார்பில் நன்றியையும், பாராட்டுதல்களையும் மேற்படி மன்றத்தின் கனடா செயற்குழுவிற்கும் நெடுந்தீவு செயற்குழுவிற்கும் தெருவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த பதினொரு ஆண்டு காலமாக தங்களின் பணி மிகவும் காத்திரமானதாக எமது தீவக மக்களுக்கு சென்றடைந்துள்ளது. இதன் காரணமாக பல்வேறு சமூக மட்டங்களிலும் வாழ்ந்து வரும் வறிய குடும்பங்கட்கும் வறிய மாணவர்கட்கும் தங்கள் வாழ்வாதாரத்தையும், கல்வி செயற்பாடுகளையும் முன்னோக்கி செயற்படுத்த நீங்கள் பேருதவி புரிந்துள்ளீர்கள். யுத்தத்தினாலும், யுத்தத்தின் பின்னரான தூர நோக்கற்ற செயற்பாடு களினாலும் பெருமளவான குடும்பங்கள் தொடர்ந்தும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரக்கூடிய துரதிஸ்ரமான நிலமை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நாளாந்த குடும்ப சீவியத்திற்காக மக்கள் கஸ்ரப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள், பிள்ளைகளை கல்வியில் முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் இருந்தாலும் பொருளாதார பிரச்சனைகள் பெரும் தடையாக அமைகின்றது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு உங்களைப்போன்ற நல்ல உள்ளங்கள் ஆற்றிவரும் சேவையினால்தான் ஓரளவாவது உதவிகளைப்பெற்று வாழ்வில் முன்னேற்றம் காணுகின்றார்கள். உங்களின் இந்த சமூகப்பணி தொடர வேண்டும் அதற்கான சகல ஆதரவையும் புலம்பெயர் நாடுகளில் வாழும் அனைத்து எமது தீவக மக்களும் கனடா பழைய மாணவர் மன்றத்திற்கு பேருதவி புரிய வேண்டுமென்று இந்த "பகிர் - 2015" மலரூடாக நெடுந்தீவு மக்களின் சார்பில் வேண்டி நிற்கின்றேன்.

இந்த நல்ல தருணத்தில் மேற்படி மன்றத்தின் ஸ்தாபகர் - தலைவர் திருவாளர் சு. நடராசா, திருவாளர் க.பொன்னுத்துரை (செயலாளர்), திருமதி கலாதேவி விசாகன் (பொருளாளர்), திருவாளர் வே. துரைசிங்கம் திருவாளர் இ. கந்தையா, திருவாளர் சு. குமாரசாமி ஆகியோருக்கு நன்றி தெரிவித்து தங்களின் அர்ப்பணிப்பான சேவைகட்காக பாராட்டுவதுடன் தங்கள் சேவை தொடர வாழ்த்தி நிற்கின்றேன்.

அதே நேரம் தங்களின் சிந்தனையை எமது தீவகத்தில் செயற்படுத்தி நிற்கும் திருவாளர் எ.அருந்தவசீலன் (தலைவர்) திருவாளர் எ.ஜோ.கெனடி (செயலாளர்) திருவாளர் எஸ்.பி.அருளப்பு (கௌரவ தலைவர் பிரதேச சபை நெடுந்தீவு) திருவாளர் அ.புவனேந்திரன் ஆகியோருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெருவித்துக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இவர்களின் உதவியால் நன்மையடையும் அனைவரும் குறிப்பாக மாணவர்கள் மேம்பாடடைந்து தீவக வளர்ச்சிக்காக சிறப்பாக பணியாற்றவேண்டும் அதுவே நீங்கள் செலுத்தும் நன்றிக்கடனாகவும் அமையும் என்று கூறி அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

11.01.2015

*ஜே.எக்ஸ்.செல்வநாயகம்*
*உதவி செயலாளர்*
*ஆளுநர் செயலகம்*
*வட மாகாணம்*

# பகிர் என்னும் ஆவணம் படர்ந்து வளர்க!

ஈடிற் புகழார் ஈழநன் னாட்டில்
தேடரும் பண்பார் நெடுந்தீவில் திகழும்
பாட சாலைகள் தம்மிற் பாங்குறக்
கூடிப் படித்த மாணவர் குறைவிற்
கனடா நாட்டில் கவினார் மன்றம்
இனிதே அமைத்தே எழுத்தறிவித்த
தங்கள் பழைய பாட சாலைகள்
நன்கு வளர நவிலரும் உதவிகள்
புரிந்து வருவது போற்றுதற் குரியது
சரிந்த சரித்திரம் தலைதூக்க லானது.

என்றும் நன்றி மறவாத இயல்புடன்
நன்றே பழைய மாணவர் இணைந்து
பிறந்த பிறப்பின் பெரும்பயன் உணர்ந்து
சிறந்த பணிகளைச் செய்வதைப் பதியும்
பஞ்சமில் அழகுடன் பகிர்எனும் பெயருள்ள
சஞ்சிகை தன்னை மன்றம் தகுந்த
ஆவண மாக ஆண்டுகள் தோறும்
நாவலர் போற்ற வெளியிடல் நன்றே.

பகிரும் இவ்வாண்டு பன்னிரண் டாவது
அகவையைக் காண்பது ஆற்றல் மாணவர்
தொடர்ந்து செய்யும் தொண்டுக்கும் ஆனது
படர்ந்து வளர்க பைந்தமிழ் பகிர்இதழ்!

பசுந்தீவின் பண்பினை ஒற்றுமைப் பாங்கினை
இசைந்து மாணவர் யாவரும் வளர்த்திட
இறைவன் வளங்கள் எல்லாம் வழங்கி
நிறைவாய் அருள வாழ்த்தவன் நேர்ந்தே!

*- கவிஞர். வி. கந்தவனம்*



## உப தலைவரிடமிருந்து....


எங்கள் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய புலம் பெயர்ந்து வாழ்கின்ற இனிய தமிழ் மக்களே, நெடுந்தீவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இனிய உறவுகளே, நெடுந்தீவில் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றத்தின் உப தலைவர் என்ற முறையில் சில விடயங்களைக் குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். இதற்கு முன்பு பத்தாம் ஆண்டு "பகிர்" மலர் வெளியீட்டில் நிறைய விடயங் களைத் தெரியப்படுத்தி இருந்தேன். இம்முறை அவைகளை விட்டு விட்டு கொஞ்சம் சுருக்கமாக எழுத எண்ணியுள்ளேன். நாங்கள் எவ்வளவு உதவியாக இருந்தாலும் கூட, எங்கள் மன்றத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் இந்த மூவருமே எந்தச் சிரமத்தையும் பாராமல் எங்கள் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளுக்குச் சென்று நெடுந்தீவு மக்களையும், நெடுந்தீவின் விசுவாசிகளையும் சந்தித்து அவர்களுக்கு நெடுந்தீவுப் பாடசாலை மாணவர்களுக்கு, முதியோர் களுக்கு, அங்கு கஷ்டப்படுகின்ற வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விடயங்களை எடுத்துக் கூறி, செயற்படுத்திக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த நிலையில் தங்கள் வேலைத்திட்டங்களை ஓரங்கட்டி விட்டு எங்களுடைய ஊர், எங்கள் உறவுகள், எங்கள் பிள்ளைகள் என்று யோசிக்கிறார்கள். அதுதான் பெருமைக்குரியது.

இதன் பின்பு நெடுந்தீவில் பல புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களுக்கும், தரம் 5 இன் மாணவர்களுக்கும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மேலதிக வகுப்புக்களை நடத்துதல், பாடசாலைகளின் அபிவிருத்தித் திட்டங்களும், ஆதரவற்ற முதியோர்களுக்கு மாதாந்த அடிப்படையில் பணம் வழங்குதல், மரணச் செலவுகளுக்கு உதவி செய்தல், பாரிய நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பண உதவி வழங்குதல் போன்ற 30இற்கு மேற்பட்ட திட்டங்களை பன்னிரெண்டு வருட காலமாக நிறைவேற்றி உள்ளது. மேலும் பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளது.

நெடுந்தீவு மக்களாகிய நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். உங்களால் உணர முடியும். எங்கள் தலைமை, நிர்வாகத்தோடு சேர்ந்து எடுத்த முயற்சியை தன்னுயிர் இருக்கும் வரை செய்து கொண்டே இருக்க வேண்டுமென்ற உணர்வோடு செயற்படுத்திக் கொண்டு இருப்பதைக் காண முடிகின்றது. இது அனைவருக்கும் தெரிந்ததே. நெடுந்தீவைப் பொறுத்த மட்டில் அந்நாளில் அரச ஊழியர்களின் பிள்ளைகள், பண வசதி படைத்தவர்களின் பிள்ளைகள் தான் வெளியே சென்று மேற்படிப்பைத் தொடரக் கூடியதாக இருந்தது. எத்தனையோ வறுமைக்கோட்டின் கீழ் உள்ள நன்றாகப் படிக்கக் கூடிய மாணவர்கள் வன்னிப் பகுதிக்குச் சென்று கூலி வேலையும், விவசாயமும் செய்து வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டார்கள். நெடுந்தீவில் ஆரம்பக் கல்வியைக் கற்றுக் கொண்ட நாங்கள் இன்று வெளிநாடுகளில் நல்வாழ்க்கை வாழ்கின்றோம் என்றால் அது அம் மண் தந்த கொடையே எனலாம். அவ்வாறே அங்குள்ள பிற்சந்ததிகளையும் சற்றே சிந்தித்து, நம் மண்ணில் பிறந்த வெளிநாடுகளில் வாழுகின்ற ஒவ்வொரு பழைய மாணவனும் தங்களால் ஆன சிறு உதவியை நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் கனடாவினூடாகச் செலுத்தி அங்குள்ள குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவி, இப்பணியை தொடர வேண்டி நிற்கின்றேன்.

நன்றி.

**இரா. கந்தையா**
**உபதலைவர்**
**நெ.பா.ப.மா. மன்றம், கனடா**



## உப செயலாளரிடமிருந்து......

பிறந்த நாடு பெற்ற தாய்க்குச் சமமெனும் தமிழரின் மரபுக்கேற்ற விதத்தில் நெடுந்தீவு மக்களிற்காக பல உதவிகளை வழங்கி வருகின்ற அனைத்து உள்ளங்களுக்கும், எனது நன்றி கலந்த வாழ்த்துக்கள்.

நாட்டு சூழ்நிலை ஓரளவு முடிவுக்கு வந்திருக்கும் நிலையில் எமது தீவகத்திற்கு புலம் பெயர்ந்து வாழும் நாங்கள் ஏற்ற வகையான உதவிகளைச் செய்து கொடுக்கலாம் என்று சிந்திப்போமானால் முதலில் நாங்கள் செய்ய வேண்டியது நெடுந்தீவில் வாழும் இளைஞர்கள், யுவதிகள் அனைவரையும் நாட்டு முன்னேற்றத்திற்குப் பாடுபடும்படி ஊக்கப்படுத்த வேண்டும். அவர்களுக்குத் தேவையான பண வசதிகளை புலம்பெயர்ந்து வாழும் நாங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவர்களைச் சோம்பேறிகளாக இருக்க இடம் அளிக்கக் கூடாது. எமது மன்றத்தில் ஒரு குறிப்பிட்டவர்கள் மட்டுமே தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள், ஏனையோர் ஒரு அக்கறையும் இல்லாதார் போல் இருக்கின்றார்கள். எனவே நாங்கள் நிறையவே அங்கத்தவர்களை உள்ளூரிலும், புலம் பெயர் நாடுகளிலும் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் எங்களால் பாரிய அளவிலான செயற்திட்டங்களை ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும். எமது தீவகம் எவ்விதத்திலும் பின்தள்ளப்பட்ட ஒரு தீவாக இல்லை என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் மனதில் எண்ண வேண்டும். எல்லா வகையான வளம் கொண்ட ஒரு அழகான தீவகம். எனவே எமது மன்றத்தால் வகுக்கப்பட்ட செயற்திட்டங்களை விட இன்னமும் பல தேவைகள் அங்கு உண்டு. எல்லாவற்றுக்கும் தேவை பணம். இந்தப் பணத்தை எப்படி எடுக்க வேண்டும் என்பது கேள்விக்குறியாக உள்ளது. இது ஒரு கடினமான காரியம். அன்பான உறவுகளே, நீங்கள் செய்ய நினைக்கும் ஒவ்வொரு உதவியும் ஒருவரின் வாழ்க்கையை கட்டாயம் மாற்றி அமைக்கும் என்பது உண்மை. எனவே உங்களால் இயன்ற உதவியை நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் - கனடா ஊடாக அல்லது நெடுந்தீவுக் கிளை ஊடாகவோ அளிக்குமாறு அன்பாகவும், பண்பாகவும் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

*வேலுப்பிள்ளை துரைசிங்கம்*
*துணைச்செயலாளர்*
*நெ.பா.ப.மா.மன்றம் கனடா*

நெடுந்தீவு பிரதேசசபை
ප්‍රාදේශීය සභාව ඩෙල්ෆ්ට්
DELFT PRADESHIYA SABHA

எமது இல:
My No: NP/14/41(7)/01/01/com
මගේ අංකය
உங்கள் இல:
Your No:
ඔබේ අංකය

தொலைபேசி இலக்கம்:
T.P.No: 0212215211
දුරකථන අංකය 0213202304

e.mail: tsecretarydelft@yahoo.com

திகதி:
Date: 2015.01.07

## வாழ்த்துச் செய்தி

பிறந்த மண்ணை மறக்காது கனடா நாட்டில் வாழ்ந்து வரும் நம் சகோதரர்கள் தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை தியாக சிந்தையுடன் பிறந்த மண்ணுக்கு வழங்கிக் கொண்டிருப்பதையிட்டு பெரு மகிழ்வு கொள்கிறேன்.

1996ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே கனடா ஒன்றியம் என்ற பெயரில் பல உதவிகளைச் செய்து வந்தவர்கள். இன்று நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் என்ற பெயரில் பல உதவிகளை செய்து வருவது என்றும் மறக்க முடியாத விடயமாகும். அவர்கள் சேவையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்திருப்பது முக்கிய விடயமாகும்.

பிறந்த மண்ணில் கல்வி வளர்ச்சி அடைந்தால் தான் ஏனைய துறைகளும் வளரும் என்ற துூரநோக்கோடு கஸ்ரப்பட்ட குடும்பங்களின் திறமையான மாணவர்களை தத்தெடுத்து அவர்களின் பல்கலைக்கழக படிப்புவரை உதவி வருகிறார்கள். மேலும் ஆரம்ப காலத்திலேயே நெடுந்தீவு மாணவர்கள் கணிதம்,விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களிலும் முன்னேற்றமடைய வேண்டுமென்ற குறிக்கோளுடன் அப்பாடங்களுக்குரிய ஆசிரியர்களை நியமித்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்திருந்தார்கள்.

தொடர்ந்து அவர்கள் செய்துவரும் உதவிகளில் முக்கியமானது முதியோருக்கான உதவித்திட்டமாகும். முதியோர் கடைசிக்காலத்தில் தங்கள் சிறிய தேவைகளை சுதந்திரமாக பூர்த்திசெய்து சந்தோசமாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செய்துவரும் உதவிகள் பாராட்டத்தக்கதாகும்.

மேலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சியுடன் அம்மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்குத் தேவையான சிறிய தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளனர். அத்துடன் முன்னாள் மகாவித்தியாலய அதிபர் அமரர் திரு.நவரத்தின சிங்கம் அவர்களின் தன்னலமற்ற சேவையை மறவாதிருக்க அவருக்கு நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் சிலை எழுப்பியதுடன் அவரின் நூற்றாண்டு விழாவையும் சிறப்பாக கொண்டாடி அவர் சேவையின் முக்கியத்துவத்தை வருங்கால ஆசிரிய, மாணவ சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளனர்.

எனவே குறிப்பாக 1996ம் ஆண்டு தொடக்கம் அன்றும் இன்றும் கனடாவாழ் சகோதரர்கள் பிறந்த மண்ணுக்கு செய்துவரும் உதவிகள் பாராட்டத்தக்கதாகும். அத்தோடு எதிர்வரும் காலங்களிலும் உங்களின் தன்னலமற்ற உதவியும் சேவையும் மேன்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துவதோடு, பிறந்த மண்ணுக்கான சேவைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கும் திரு.எஸ் நடராசா அவர்களுக்கும் அவரோட சேர்ந்து உதவிக்கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களுக்கும் நன்றியையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எஸ்.பி.அருளப்பு
தவிசாளர்
நெடுந்தீவு பிரதேசசபை
(போசகர்
நெ.பா.ப.மா.மன்றம் - கனடா-நெடுந்தீவுக்கிளை)

## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் – கனடா
## நெடுந்தீவு கிளை
## OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA
## DELFT BRANCH

| எ.அருந்தவசீலன் | பி.யோண்சன் கெனடி | அ.புவனேந்திரன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

### "பகிர" மலர் மக்களுக்கு சேவையை பகிர வாழ்த்துகின்றேன்

நெடுந்தீவு வாழ் உறவுகள் புலம் பெயர்ந்து சென்று எத்தனையோ நாடுகளில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் சிலர் தமது பிறந்த மண்ணின்மீதும் மக்கள்மீதும் கொண்ட பற்றினால் பல்வேறு தரப்பட்ட சேவைகளையாற்றி வருகின்றார்கள். அந்த வகையிலே நெடுந்தீவைச் சேர்ந்த அன்பு உள்ளங்கள் நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்-கனடா என்ற நாமத்தோடு செயற்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே.


இவ் மன்றமானது பத்து ஆண்டுகளைத்தாண்டி 12வது ஆண்டு பிறந்த நாளைக் கொண்டாடி "பகிர" என்னும் மலரை வெளியிடுவதில் நெடுந்தீவுசு வாழ் மக்கள் சார்பில் உவகை அடைகின்றேன்.சென்ற ஆண்டு இவ் மலரை எம்மண்ணிலே அச்சுப்பதிவு செய்து பெருவிழாவாக கொண்டாடி இருந்தோம். இம்முறை மலர் வெளியீடு கனடாவில் நடப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றமானது வறுமைக் கோட்டின் கிழ் வாழும் முதியோர் கொடுப்பனவு, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர் கொடுப்பனவு, பாடசாலை தேவை அறிந்து காணி,உபகரணங்கள் கொள்வனவு, மருத்துவ சேவைக்கான கொடுப்பனவு, மாணவர்கள் வெளியிடங்களில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொள்ள பயணக் கொடுப்பனவு, பல்கலைக்கழக மாணவர் கொடுப்பனவு,பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கொடுப்பனவு, கணினி பயிற்சி வகுப்புக்கள் போன்ற சேவைகளை ஆற்றி வருவது மிகவும் குறிப்பிடத்தக்கது.

எனவே இவர்களது அளப்பரிய சேவை தொடர வாழ்த்துவதோடு, கனடா வாழ் உறவுகளுக்கும், நிர்வாக அன்பர்களுக்கும் எனது வாழ்த்துதலையும்,மக்கள் சார்பில் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

என்றும் அன்புடன்

தலைவர்
(எ.அருந்தவசீலன்)
நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய
மாணவர் மன்றம் - கனடா
நெடுந்தீவுக் கிளை.



நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா,

நெடுந்தீவுக் கிளை,

செயலாளரின் உள்ளத்திலிருந்து,

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா நெடுந்தீவுக் கிளையின் செயலாளர் என்ற வகையில் இம் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிலே பெரு மகிழ்வும் பேருவகையும் அடைகின்றேன். இவ் மன்றமானது எம் தீவகத்திற்கு ஆற்றிவரும் சேவைகளை சொல்வதற்கு ஒரு கோடி வார்த்தைகளே போதாது என்றே கூறமுடியும். முதியோருக்கான கொடுப்பனவை ரூபா 300 இலிருந்து ரூபா 500ஆக உயர்த்தி உள்ளமை நெருமைக்குரியதாகும் வறிய மாணவருக்கான உதவித்தொகையும், ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புத் தொகையும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பொருள் உதவிகள் பண உதவிகள் போன்ற செயற்பாடுகள் போற்றத்தக்கதாகும், எனவே இம் மன்றத்தின் சேவைகள் மேன்மேலும் வளர்ந்து எம் தீவகத்திற்கு இதன் பணி தொடர வாழ்த்தி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி,

P. J. Osony.
..............................

பீ.ஜோண்சன்கெனடி,

செயலாளர்.

நெடுந்தீவுப் பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா,

நெடுந்தீவுக் கிளை.

# J/DELFT R.C. LADIES COLLEGE

Phone: 021 320 2769

***DELFT, SRILANKA*** email: jafdrc@gmail.com

"பகிர்" மலரை என் இதயம் நிறை வாழ்த்துக்கள்.

யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரித்தாயவளின் புதிய அதிபர் பணியை ஏற்றிருக்கும் அருட்சகோதரி மேரி யூட் லூமினா ஜோர்ஜ் ஆகிய நான், நெடுந்தீவு பாடசாலைகளின் பழையமாணவர் மன்றம்-கனடா தன் புதிய இதழ்தனை விரித்து நறுமணம்பகிர இருக்கும் 11வது "பகிர்" மலரிதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதன் மூலம் தங்கள் அனைவரையும் சந்தித்து, என் அன்பைப் பகிர்ந்து, தங்கள் குடும்பத்தில் நானும் ஒரு உறவாக மலர்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்ததே" என்னும் அமுதமொழிகளுக்கு அளவுகடந்த அர்த்தம் கொடுத்துப் பசுந்தீவாம் நெடுந்தீவில் பாங்குறவே தன்பணியாற்றும் "நெடுந்தீவு பாடசாலைகளின் பழையமாணவர்மன்றம்-கனடா" இதன் அர்ப்பணிப்பு, தியாகம், பிறர்நலம்; பிறந்தகத்தின் மீதுள்ள அளவுகடந்த பற்று, பாசம், சேவை மனப்பான்மை இவற்றைக் கண்டு உள்ளம் பூரித்து நிற்கின்றேன்.

தேசம் கடந்து தூரத்தில் வாழ்ந்தாலும் பிறந்தகம் வளர்ச்சிபெற தாங்கள் மேற்கொள்ளும் விவித செயற்பாடுகளை "பகிர்" பகிர்ந்துநிற்கிறது. பாடசாலைகளுக்கான உதவிகள், ஊக்குவிப்புக்கள், முதியோர்களுக்கான உதவித்திட்டங்கள், நோயாளர்களுக்கான உதவிகள், இன்னும் காலத்தின் அறிகுறி கண்டு அவ்வப்போது எழுகின்ற அவசர, இக்கட்டான நிலைமைகளில் உதவிக்கரம்கொடுக்கும் நிதியுதவிகள் இவை யாவும் பசுந்தீவாம் நெடுந்தீவை வாழவைப்பது கண்கூடு. நெடுந்தீவுசார் பாடசாலைகள் அனைத்திற்கும் பாரபட்சமின்றி தாங்கள் வழங்கிவரும் உதவிகளும், ஊக்குவிப்புக்களும் மாணவச்செல்வங்களின் கல்விவாழ்வை வளம்பெறச் செய்கின்றன. இத்தகைய தியாகச் செயற்பாடுகள் பிறந்த மண்மீது பாசம்கொண்ட பண்பாளர்களிடத்திலிருந்தே ஊற்றெடுக்கமுடியும். அந்த வகையில் கனடாவாழ் நெடுந்தீவு உறவுகளாம் தங்கள் அனைவரினதும் அர்ப்பணிப்பு நிறைந்த சேவைகளை, செயற்பாடுகளை வாழ்த்திப் பாராட்டி நிற்கின்றேன்.

எமது கல்லூரித்தாயவளின் வளர்ச்சிக்கும், அவளது மழலைகளின் கல்விவாழ்விற்கும் தங்களது மன்றத்தின் மூலமாக அளித்துவரும் சகல உதவிகளுக்கும் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து நானும் என் இதயம்நிறை நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இம்மன்றத்தின் பிள்ளைகளாகிய தாங்களும் தங்களது குடும்பங்களும் இறையாசீருடன் வளம்பல பெற்று நீடூழி வாழ, "நெடுந்தீவு பாடசாலைகளின் பழையமாணவர்மன்றம்-கனடா" என்னும் பெருவிருட்சம் மேலும் பல கிளைபரப்பி செழித்தோங்கி வளர இறையவனை இறைஞ்சி, இதய நிறைவுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

PRINCIPAL
J/Delft R. C. Ladies College
(அருட்சகோதரி மேரி யூட் லூமினா ஜோர்ஜ்)
அதிபர்



## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் – கனடா

## நெடுந்தீவு கிளை

## OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS - CANADA
## DELFT BRANCH

| எ.அருந்தவசீலன் | பி.யோண்சன் கெனடி | அ.புவனேந்திரன் |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

# "பகிர்" மலர வாழ்த்துகின்றேன்

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்-கனடா 12வது நிறைவு மலரை வெளியிட இருக்கும் இத்தருணத்தில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மன்ற பொருளாளராகிய நான் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மன்றமானது நெடுந்தீவு வாழ் பாடசாலை மாணவர்கள் வயோதிபர்கள், நோயாளர்கள், பாடசாலைகளுக்கான காணி,பொருள் உதவி போன்றவற்றை செய்து சேவையாற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவிலிருந்து புலம் பெயர் உறவுகளாக வெளிநாடு சென்று எம்மண்ணிற்காக பணஉதவியை தந்து இந்த மன்றத்தையும், தீவக மக்களுக்கும் சேவையாற்றி வருகின்றமை மிகவும் அளப்பரிய சேவையாகும்.

எனவே இவர்களது சேவை எமது மண்ணுக்கும், மக்களுக்கும் தேவை என்பதையும், இப்பணி தொடர்ந்தும் மலர வேண்டுமெனவும், கனடா வாழ் நிர்வாகத்திற்கும் நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

என்றும் அன்புடன்

பொருளாளர்
(அ.புவனேந்திரன்)

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய
மாணவர் மன்றம் - கனடா
நெடுந்தீவுக் கிளை.



க.அரசரத்தினம்
நிர்வாக உறுப்பினர்(நெ.பா.ப.மா.மன்றம்)
ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அதிகாரி
நெடுந்தீவு
01-01-2015

## நெடுந்தீவின் வளர்ச்சியில் பங்குகொள்ளும் "பகிர் " மலர் மலர வாழ்த்துகின்றேன்

நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் கனடா வாழ் உறவுகளின் ஒத்துழைப்போடு எம் மண்ணிற்கும், மக்களுக்கும் ஆற்றி வருகின்ற சேவைகளுக்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். புலம் பெயர் உறவுகள் மனமுவந்து வழங்கும் உதவியோடு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச் செயற்பாடானது எமது மண்ணின் வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கும், மாணவர்களுக்கும் உதவியாக கிடைப்பது போற்றுதற்குரிய விடயமாகும். என்னைப் பொறுத்தவரையில் சுமார் இருபத்தொரு ஆண்டுகளாக மன்றமானது சேவையாற்றி வருகின்றது. கல்விச் சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவது சாலச்சிறந்தது. இது போன்ற சேவைகள் தொடர்ந்து வளர எங்களாலான உதவிகளையும் செய்ய தயாராக இருக்கின்றோம்.

உங்களது சேவையை வழி நடாத்தி வருகின்ற தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்களுக்கும் புலம் பெயர் கனடா வாழ் உறவுகளுக்கும் நன்றியைக்கூறி இந்த மகத்தான சேவையென்றும் மலர வாழ்த்துகின்றேன்.



என்றும் தங்கள் சேவையில்

(க.அரசரத்தினம்)
ஓயவு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி
நெடுந்தீவு

## Message from the President

Respected residents of my dear Delft - Canadians and all those Delft community living in every nook and corner of the globe, I feel proud and honoured in sending this message to the Old Students Association of Delft School - Canada

I am happy to announce that the 12th Anniversary celebration of our association; along with the release of the Souvenir-"PAHIR" would be held in our loving land - Delft in May, 2015, and I sure that all our friends and families would make this occasion a happy, colourful and memorable event.

Our noble vision to make our land-Delft a model "Scholastic Training Zone "is not at distance away if we the people of Delft put our heart and soul to make the dream come true. The Old Students Association of Schools-Delft is being on its marathon venture for the past twelve years working tirelessly along with all the people of Delft living in and out of Delft. In this context, taking account of the ground situation of the living standard of the people of Delft, the association is helping all our schools and the communities of the great island in various forms and ranges Considering the per-capita income of the needy families, the students who are on or below poverty line and eager to continue learning to any level they wish for, we the Old Students Association of Canada would readily stands by them to give the necessary guidance and support.

With the help of the head of the schools, we select students based on their progress, performance and attitude in class, achievement in scholarship and other public examinations, who are enthusiastic and hardworking; we provide all facilities to precede their studies from the primary level up to the completion of their university degree. Also, we arrange special tutoring classes to Grade -5 students to prepare for scholarship examination and on their success we recognise and award them, if necessary provide financial help to precede their studies in colleges.

We understand that there is a shortage of teachers in some schools to teach Maths, Science, English and other important subjects for A/L classes. In order to level up the shortfall, we have decided to employ additional teachers and pay the salaries from our funds.

To make our children to be knowledgeable in a fast growing world, and get connected with the various up to date information technology, we propose to launch computer training for students from Grade-6 and above. This would be an extra activity outside the school curriculum for those living in the western and central part of Delft and we wish to invite any suggestions or proposals from the elders, parents, teachers and the student community to make this a success We expect the cooperation and encouragement from the community leaders and public to initiate this important project at the earliest possible time.

To build a healthy and vibrant student community, sports and games are a significant part of education; realizing the lack of this activity in some of the schools, our association has donated a reasonable amount of money to improve the playing field of Subramaniya Vidiyaliyam - Delft East, and Sri Kantha Vidiyaliyam to lay a playing courtyard.

To encourage sports and games in all schools we will donate sports equipment to introduce soccer, volleyball and basketball in all schools where these games doesn't exist.

Beside our ongoing scheme of donating Rs.500.00 to the seniors and disabled who are living below the poverty line will continue , along with, we have decided to introduce a program for them to provide medical advice, assistance and funding for ailments such as eyesight and hearing loss, and for some other critical illnesses, if and when necessary.

To protect the environment; safeguard and preserve the vegetation of our land, and to add additional income for low income families , we are organization an annual "Tree planting " campaign by distributing fee fruit trees, coconut palms, shady trees and such verities to inflate the climate of the habitat. Also we will fix name boards with a brief background on every historically important .sites

To achieve all what I have mentioned above, and what we had done, and what we are engaged right now would not be possible if not for the full cooperation and hard work put together by the following executives and members of the main branch operating on the ground -The Old Students Association of Delft. I sincerely thank the President Mr.Arunthavaseelan Edward, joint secretaries - Mr. Johnson Kennedy and Mrs. Mary Metillda, Treasurer Mr.Puvanenthiran Anthonymuthu, Vice- President A. Satchithanantham, patron- Mr. A.W.Ariyanayagam, coordinators - Mr. S.P. Arulappu and Assistant Treasurer Miss. Mekala Balasubramaniyam, the executive members and the principals and teachers of all schools in Delft

The encouragement and enthusiasm of all our people of Delft living in Canada, Europe and other countries, their contributions by way of cash and kind is admirable and an energising source that enables the Old Students Association of Delft-Canada to engage in such an incredible mission. On our mission to meet our people in Europe, the hospitality, the inherent feeling of our island's unity and brotherhood exhibited by every of our descendants; young and old are a clear indication as to how much they love to improve the overall standard; especially in educating the future generation of our beautiful and land-Delft. They provided all the possible facilities; food, shelter transportation and entertainment for us to feel home, safe, and free.

My special thanks to our business community for having given us their valuable adverts and helped us to print out this elegant and meaningful souvenir and to a comrade and caring supporter of our OS association of Delft-Canada; Captain S.Santhiapillai.

Finally, ,I wish to thank our members, their relations, friends and colleagues for having helped us in many ways, to bring out this colourful Annual Magazine of Old Students Association of Delft "PAHIR", and most importantly to our friendly Printer - FINE PRINT. for designing and layout of this beautiful publication.

Thank you.

*Delft Nadaraajah Subramaniam*
*President*
*Old Students Association of Delft Schools - Canada*
*Email: pahir@delftstudents.ca*
*Nada_1948@hotmail.com*
*Tele: 905 457-7678/416 802 - 6291*

## From the Honorary Secretary

My fellow Delft-Canadian friends, families and their loving children , patrons, and my respected people of Delft living around the globe, I welcome you all for the Annual celebration and the release of the souvenir "PAHIR"of the Old Students Association of Delft-Canada I am happy to inform that this association has been functioning for the last thirteen years (13) and taking forward its mission- PAHIR- meaning "share," and I am proud to say that we have been operating on or accomplished about thirty of our projected engagements within this short period of time.

The projects that are in the progression right now:

1. For the past few years our association is helping many seniors' citizens who are living in Delft without getting any sort of help in cash or kind from relations or friends living in foreign countries.
2. For the past twelve years we are funding those children who are living on or below poverty line, and are eager to study, up to the university education
3. Helping with cash, to those students who represent their schools at the district /provincial/ national level in various competitions like athletics, games, cultural, language and literature based competitions.
4. Every year we fund to organize Delft-Inter schools Track & Field Athletic meets
5. We employ and pay additional teacher to teach some important subjects in some schools for all grades where there is shortage of teachers
6. Introduced " Medical Aid" program , through which we help our people who seek special treatment for critical illness
7. Made arrangements to teach computer skills in two schools, and very soon this facility would be extended to eight more schools.
8. We are paying Rs.5000.00 to every student who passes the Government Scholarship Examination. And also, every year we have been conducting special classes for Grade - 5 students to prepare them to write the Scholarship examination.
9. In December 16th 2013, the tenth annual celebration and distribution of our magazine "PAHIR" was conducted in a grand scale at the Regional Council Hall On this occasion; we presents a digital camera to the Roman catholic Girls School, cash for students below poverty line, bank book with a cash deposit to students who passed scholarship examination, learning materials for low income family students, cash for university students, a voice recorder to Miss Mariya Dushianth of the Jaffna University and monthly and cash payment for seniors below poverty line were presented by the invited guests.
